# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:27** **தேதி:09.03.2015**

## சில மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

மத்திய சங்கம் வெளியிட்டுள்ள செய்திகள் சிலவற்றை கீழே கொடுத்துள்ளோம்.

### ”கடந்த 7 வருடங்களாக BSNL மற்றும் MTNL நிறுவனங்கள் மோசமாக நடத்தப்பட்டதுடன் விரிவாக்கத்திற்கு அனுமதிக்கப்பட வில்லை” -ரவி சங்கர் பிரசாத்.

28.02.2015 அன்று CNBCக்கு மத்திய அமைச்சர் திரு ரவி சங்கர் பிரசாத் கொடுத்த பேட்டியிலிருந்து....

“BSNL மற்றும் MTNL நிறுவனங்களின் இணைப்பு சரியில்லை என நான் கூற மாட்டேன். ஆனால் இந்த இரண்டு நிறுவனங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதே தற்போதைய எனது முக்கியமான சிந்தனை. இந்த துறையினை அக்கறையுடன் கவனிக்கும் உங்களிடம் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்த இரண்டு பொதுத்துறை நிறுவனங்களும், கடந்த ஏழு ஆண்டுகளாக மோசமாக நடத்தப்பட்டது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். 2005-2006ஆம் ஆண்டுகளின் இந்த இரண்டு நிறுவனங்களும் ஆயிரம் ஆயிரம் கோடி ரூபாய்களை லாபமாக ஈட்டியுள்ளன. தற்போதைய சிக்கலான நிலைக்கு வருவதற்கு அதனை தொடர்ந்த வருடங்களில் என்ன நடந்தது? நான் தற்போது வெளிப்படையாக சொல்ல விரும்பும் ஒரே விஷயம் என்னவென்றால், இந்த நிறுவனங்கள் தங்கலை விஸ்தரித்துக் கொள்ள அனுமதி கொடுக்கப்பட வில்லை என்பதே”.

### கேபிள் வலைத்தளங்கள் மூலமாக ப்ராட் பேண்ட் சேவைகளை BSNL நிறுவனம் வழங்க உள்ளது

கேபிள் வலைத்தளங்கள் மூலமாக ப்ராட்பேண்ட் சேவைகளை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக பரிசீலித்து வருவதாக BSNL CMD திரு அனுபம் ஸ்ரீவத்சவா கூறியுள்ளார். அதற்காக கேபிள் ஆபரேட்டர்களுடன் உடன்பாடு காண வேண்டும். நாட்டின் பல பகுதிகளில் இது வெற்றிகரமாக பரிசோதித்து பார்க்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. இன்னும் இரண்டாண்டுகளில் தற்போதைய வருமானமான 8850 கோடி ரூபாய்களை இரட்டிப்பாக்கி 16000 கோடி ரூபாய்களாக உயர்த்த BSNL திட்டமிட்டுள்ளதாக CMD தெரிவித்தார்.

### BSNLன் சந்தாதாரர்கள் குறைகின்றனர்

இந்திய பாராளுமன்றத்தில் மார்ச் 3ஆம் தேதி தொலை தொடர்பு அமைச்சர் பேசும் போது BSNLன் சந்தாதாரர்கள் குறைந்து வருவதாக தெரிவித்தார். அமைச்சர் கொடுத்த தகவலின் படி 2012 மார்ச் மாதத்தில் BSNLன் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 945.09 லட்சம். அது மார்ச் 2014ல் 924 லட்சமாக குறைந்து விட்டது. தற்போது, 2015 ஜனவரியில் அது 781.24 லட்சமாக உள்ளது.

## ITS அதிகாரிகளின் வழக்கு மார்ச் 23ம் தேதிக்கு ஒத்தி வைப்பு

BSNLEU, SNEA மற்றும் AIBSNLEA ஆகிய சங்கங்கள் தொடர்ந்த ITS அதிகாரிகள் மீதான வழக்கு04.03.2015 அன்று டெல்லி உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. எனினும் அந்த நீதிபதி அந்த வழக்கு விசாரணையிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டுள்ளார். எனவே இந்த வழக்கு மார்ச் 23ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதே வழக்கில் இதே நீதிபதி, முன்னர் அரசு தரப்பு வக்கீலாக ஆஜராகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2015, மே 3ஆம் தேதி முதல் தேசிய MNP

ஏற்கனவே 2011 ஆம் ஆண்டு ஜனவரி முதல் MOBILE NUMBER PORTABILITY (MNP) அமுலாக்கப் பட்டுள்ளது. ஆனால் அது தொலைதொடர்பு வட்டங்களுக்குள் மட்டுமே கிடைத்து வந்தது. ஆனால் தற்போது NATIONAL MOBILE NUMBER PORTABILITY (National MNP)ஐ 2015 மே 3ஆம் தேதி முதல் அமுல்படுத்த TRAI முடிவெடுத்துள்ளது.

## அதிக லாபம் ஈட்டியது ONGC; அதிக நஷ்டம் அடைந்தது BSNL

2013-14ஆம் ஆண்டில் அதிக லாபம் ஈட்டிய பொதுத்துறை நிறுவனம் ONGC (ரூ.22,094 கோடி). அதிக நஷ்டம் அடைந்த பொதுத்துறை நிறுவனம் BSNL (ரூ.7,019 கோடி).

.

## இந்திய தொலை தொடர்பு நிறுவனங்களின் மொத்த கடன் 2,42,896 கோடி ரூபாய்கள்

இந்திய பாராளுமன்றத்தில் மார்ச் 3ஆம் தேதி தொலை தொடர்பு அமைச்சர் பேசும் போது, இந்திய தொலை தொடர்பு நிறுவனங்களின் மொத்த கடன் தொகை 2,42,896 கோடி ரூபாய்கள் என தெரிவித்தார். இதில் BSNL நிறுவனத்தின் கடன் தொகை ரூ.4,459/- கோடி ரூபாய்கள். MTNL நிறுவனத்தின் மொத்த கடன் தொகை ரூ.14,120 கோடி. மீதமுள்ள 2,24,317 கோடி ரூபாய்கள் தனியார் தொலைதொடர்பு நிறுவனங்களின் கடன்களாகும்.

## மொபைல் ரோமிங் கட்டணத்தை 80% வரை குறைக்க TRAI முடிவு

கீழ்கண்ட முன்மொழிவுகளை TRAI தற்போது முன் வைத்துள்ளது.

| | **தற்போதுள்ள அதிகபட்சம்** | **முன்மொழியப்பட்ட அதிகபட்சம்** |
|---|---|---|
| ரோமிங்கின் போது STD கட்டணம் | நிமிடத்திற்குரூ.1.50 | நிமிடத்திற்குரூ.1/- |
| இன்கமிங் கால்களுக்கான கட்டணம் | நிமிடத்திற்கு 75 பைசா | நிமிடத்திற்கு 45 பைசா |
| ரோமிங்கின் போது SMS கட்டணம் | ஒரு SMSக்குரூ.1.50 | ஒரு SMSக்கு 25 பைசா |
| லோகல் SMS கட்டணம் | ஒரு SMSக்குரூ.1/- | ஒரு SMSக்கு 20 பைசா |

இது தொடர்பாக அனைத்து பங்குதாரரிடம் இருந்து கருத்துக்களை மார்ச் 31க்குள் அனுப்ப வேண்டும் என TRAI கோரியுள்ளது. அதற்கு பின் அது தனது இறுதி உத்தரவை வெளியிடும்.

### அமைச்சர்கள் ஏன் பெருநிறுவனங்களை விரும்புகின்றனர்?

காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் நடைபெற்ற 2G மற்றும் கோல்கேட் ஊழல்கள் உள்ளிட்டவைகளின் மீதான மக்களின் கோபத்தை பயன்படுத்தி பாஜக ஆட்சிக்கு வந்துள்ளது. அது 2G ஊழலாக இருந்தாலும் சரி, கோல்கேட் ஊழலாக இருந்தாலும் சரி. அதிகாரத்தில்

உள்ள அரசியல்வாதிகளுக்கு லஞ்சம் கொடுத்து தேசத்தின் சொத்தை பெருநிறுவனங்கள் கொள்ளையடிக்கின்றனர். காங்கிரஸ் தலைவர்களை விட ஆளும் பாஜக தலைவர்கள் எந்த விதத்திலும் மாறுபட்டவர்கள் இல்லை என்கிற செய்திகள் தற்போது கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரத் துவங்கி உள்ளன. "ஃப்ரென்ஞ் ரிவேரா"வில் உள்ள எஸ்ஸார் நிறுவனத்தின் சொகுசு தங்கும் விடுதியில் பாஜகவின் முன்னாள் தலைவரும், தற்போதைய மத்திய அமைச்சருமான நிதின் கட்காரி தனது குடும்பத்துடன் தங்கியுள்ளதாக ஆதாரங்கள் வெளி வந்துள்ளன. அந்த சொகுசு தங்கும் விடுதியில் 2013, ஜூலை மாதத்தில் தான், தனது மனைவி, இரண்டு மகன்கள் மற்றும் மகள் ஆகியோருடன் இரண்டு இரவுகள், விருந்தினர்களாக தங்கியிருந்ததாக நிதின் கட்காரி அவர்களே ஒத்துக் கொண்டுள்ளார். இது ஒரு சிறிய உபகாரமாக தோன்றலாம். ஆனால் அரசியல்வாதிகள் மற்றும் பெரு நிறுவனங்களுக்கு இடையே உள்ள "நெருக்கத்தை" வெளிக்காட்டுகிறது. அமைச்சர்கள் பெரு நிறுவனங்களை ஆதரிப்பதும், பொதுத்துறை நிறுவனங்களை பலவீனப்படுத்துவதும் ஏன் என்பது தற்போது நாம் புரிந்துக் கொள்ளலாம்.

## ஸ்பெக்ட்ரம் ஏலத்தை நடத்துங்கள்-ஆனால் முடிவுகளை இறுதி செய்யாதீர்கள்-உச்சநீதிமன்றம்

மார்ச் மாதத்தில் நடைபெறும் ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் உள்ள சில கட்டுப்பாடுகளுக்கு எதிராக ஏர்டெல், ரிலையன்ஸ் மற்றும் ஐடியா போன்ற தனியார் நிறுவனங்கள் டெல்லி, கர்நாடகா, அலகாபாத் மற்றும் திரிபுராவில் உள்ள உயர்நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்து உள்ளன. இதன் காரணமாக மத்திய அரசு உச்சநீதிமன்றத்தின் தலையீட்டை கோரியது. அரசாங்கம் ஏலத்தை நடத்தலாம், ஆனால் தனது ஒப்புதல் இன்றி அதன் முடிவுகளை இறுதிப்படுத்தக் கூடாது என உச்சநீதிமன்றம் 27.02.2015 அன்று உத்தரவிட்டுள்ளது.

## இந்திய அரசியல் சட்டமே அரசாங்கத்தின் ஒரே மதபுத்தகம்

அன்னை தெரேசாவை பற்றிய RSS தலைவர் மோகன் பகவத்தின் பேச்சு, மீடியாக்கள் உள்ளிட்ட அனைவரின் மத்தியில் இருந்தும் மிகப்பெரிய விமர்சன்ங்களை வரவைத்துள்ளது. இந்த பேச்சின் மீதான தனது நிலையினை வெளியிட வேண்டிய கட்டாயம் RSS பிரச்சாரகரான பிரதம மந்திரிக்கு ஏற்பட்டது. இந்த சூழ்நிலையில் கீழ்கண்ட அறிக்கையினை பிரதம மந்திரி வெளியிட்டுள்ளார். அவருடைய இந்த அறிக்கையினை BSNL ஊழியர் சங்கம் வரவேற்பதோடு இந்த அறிக்கையின் கூறப்பட்ட விஷயங்களை அதே உணர்வுடன் அமுல்படுத்த வேண்டும் என விரும்புகிறது.

"'இந்தியா முதலில்' என்பதே எனது அரசாங்கத்தின் ஒரேமதம்; இந்திய அரசியல் அமைப்பு சட்டமே எனது அரசாங்கத்தின் ஒரே மதபுத்தகம்; 'பாரத் பக்தி' என்பதே எங்களின் ஒரே பக்தி; அனைவரின் நலம் என்பதே எங்களின் ஒரே வேண்டுதல்"

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**